# Yesuvai Nessikiren

கலங்காதே
நான் உன் தேவன் என்றீரே
என் எதிரிகளை முறித்து வெற்றிச்சிறந்தீரே
கூப்பிடும்போது வருவேன் என்றீரே
நான் கூப்பிடுமுன்பாகவே என்னோடு இருந்தீரே

இயேசுவை நேசிக்கிறேன் - (4)
இயேசுவை நேசிக்கிறேன் இயேசுவை நேசிக்கிறேன்
இயேசுவை ஆராதிக்கிறேன் - (4)
இயேசுவை ஆராதிக்கிறேன் இயேசுவை ஆராதிக்கிறேன்

நானே நான் என்ற நீரே நீர்
உலகத்துவக்கத்திலும் நீரே நீர்
கடைசிப்பரியந்தமும் நீரே நீர்
என்னை நேசிக்கின்ற தேவனும் நீரே நீர்

வல்லவரே நல்லவரே மாட்சிமை மிகுந்தவரே
மகிமை நிறைந்தவரே துதிகளின் பாத்திரரே
இயேசுவை நேசிக்கிறேன் - (2)

உயிரே இயேசுவே உயிரே இராஜனே
என் உயிரின் உயிரானவரே

என்னை கரம்பிடித்த என் இயேசு பக்கத்தில்

நான் எதைக்குறித்தும் அஞ்சேன்
என்னை வழிநடத்தும் அவர் சமூகம் என்னோடு
நான் எதைக்குறித்தும் கலங்கேன்
துதிப்பேன் துதிப்பேன் அவரை துதிப்பேன்
இறுதி மூச்சுவரை துதிப்பேன்
அந்த மூச்சு நின்றாலும் என் துதி நிற்காதே
பரலோகம் சென்று துதிப்பேன்

என் அப்பாவை நான் துதித்திடுவேன்
இராப்பகல் காலமும் நான் துதித்திடுவேன்
தேவ தேவனை நான் துதித்திடுவேன்
காலை மாலை எவ்வேளையும் நான் துதித்திடுவேன